முருகப்பெருமான் துணை
இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்
இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்
துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 669**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

29.07.2021, வியாழக்கிழமை

1. பார்வெல்ல வந்த பரமானந்த சதாசிவகுருவே
பாருலகில் உலகோர்க்கு ஞானபலம் கூட்டி
சீர்திருத்தம் செய்து இந்த கலியுகத்தை காக்க
சிவராஜயோகியாக வந்த ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
வரங்கள் பெற்று என்பால் மாதவசியாக
வள்ளல்தன்மைகொண்டு உலகை காத்துவருக
3. வருகின்ற உன் சேவைகள் மூலமாகத்தான்
வையகம் பெருமாற்றம் காணக்கூடும்
தருகின்ற உன் தர்மத்தின் உபதேச ஞானவழியாலும்
தரணியே பாதுகாப்பு பெற்று மீளக்கூடும்
4. கூடவே அரங்கனே உன் திருவடி பற்றி உலகோர்
குருராஜா அரங்கா காப்பாய் என
திருவடி பணிந்து உமை வணங்கி வர
தொடருகின்ற தொண்டர் படைகள் மூலமே
5. குருவருள் சக்தியாக மாறி
குவலயத்தில் குருபரன் என் சக்தியாக கலந்துமே
பெருமைபட கலியுகம் ஞானயுகமாற்றம்
பிசகில்லாமல் சடுதி காணக்கூடும்
6. கூடவே அரங்கனே உமக்குள் யான்
குறைவில்லாத பேரானந்த சக்தி வழங்கிவர
ஈடேற்றம் படிப்படியாய் கூடிவர
இனிதே வரும் சுபகிருது ஆண்டில் மாற்றம்
7. மாற்றத்தை உன்வழி யானே நடத்துவேன்
மக்களை காத்து ஞானயுகமாற்றம் செய்து
ஆக்கமான ஞான ஆட்சிகளை தந்து
அரங்கன் விரும்புகின்ற ஞானச்சித்தர் காலம்இனிதே கனிந்து

8. கனிந்துமே கலியுகம் பேரிடரை கடந்து
கண்ணியமுற அரங்கன் தொண்டர்படைகள் மூலம்
அழியாமை மிக்க ஞானயுகமாற்றம்
அரங்கன் உன் வழியே சடுதி இனிதே நடந்தேறும்

9. நடந்தேற ஞானபண்டிதன் யானும்
ஞானமாக சர்வ சூட்சுமமாக
தடையின்றி நித்தம் நித்தம் தவராஜனுக்கு சக்தி கூட்டி வர
தரணியோரே அரங்கனை சந்திக்க சந்திக்க உலகோர் ஞானிகளாகி சிறக்கநேரும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–